بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 11, April 2014 (Tamil)**

## இமாம் மஹ்தி (அலை) அவர்கள் ஈதுல் அழ்ஹா அன்று அரபியில் ஆற்றிய வரலாற்று சிறப்பு மிக்க பேருரை

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஓர் இறையடையாளத்தைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அது இன்றைய நாளில் அதாவது 11 ஏப்ரல் 1900 - ஆம் ஆண்டு வெளிப்பட்டது. அந்த அடையாளம் இறைவனின் சிறப்பான ஆதரவினால் அன்னார் (அலை) அவர்களின் நாவிலிருந்து அரபி மொழியில் வெளிப்பட்டது. இது இல்ஹாமிய (இறையறிவிப்பு) அடையாளமாக இருந்தது. எனவே அதற்கு **குத்பா இல்ஹாமிய்யா** (இறையறிவிப்பின் பேருரை) என பெயர் வைக்கப்பட்டது. மேலும் இந்த இல்ஹாமிய குத்பாவை -இந்த இல்ஹாமிய நிலைமையை ஏறக்குறைய 200 பேர் கேட்டனர்; கண்டனர். இன்றைய நாளுக்குப் பொருத்தமாக இருப்பதனால் (அதாவது இன்று ஏப்ரல் மாதமுமாகும்; 11-ஆம் தேதியுமாகும்) இன்று வெள்ளிக்கிழமையாகவும் இருப்பதனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மகத்தான இறையடையாளத்தைப் பற்றி நான் கூற வேண்டும் என ஒருவர் எனக்கும் கவனமூட்டினார். ஏனெனில் சிலர், நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ள குத்பா இல்ஹாமிய்யா என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கலாம்; ஆனால் அதன் வரலாற்றுப் பின்னணியையும், கருத்தையும் அறியாதிருக்கின்றனர். **குத்பா இல்ஹாமிய்யா என்பது என்ன என்பதைப் பற்றிக் கூட சிலர் தெரியாதிருக்கின்றனர் என்பதை நான் அறிந்தபோது, அது எனக்கு மிகவும் வியப்பை ஏற்படுத்தியது.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் காட்டிய இந்த அடையாளம் நமது ஈமான்களை உறுதிப்படுத்துகின்றன; மேலும் அஹ்மதிய்யத்தின் எதிரிகளுடைய வாயை அடைப்பதற்கான வழிவகைகளை நமக்கு ஏற்படுத்தித் தருகின்றன; அன்னாரின் உண்மைக்கான சான்றை நமக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றன என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் நினைவிற் கொள்ள வேண்டும். **குறிப்பாக குத்பா இல்ஹாமிய்யா என்பது மாபெரும் மார்க்க அறிஞர்களை வாயடைக்க வைத்த மகத்தான அடையாளங்களில் ஒன்றாகும்.** எப்படி இருந்தபோதிலும் நான் கூறியது போன்று இதன் சுருக்கமான வரலாற்றையும் அதன் பின்னணியையும் பற்றி எடுத்துரைப்பேன். மேலும் அது அப்போது அங்கிருந்த நம்மவர்களிடத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது? எந்த நிலைமைகளை அவர்கள் கடந்து சென்றனர்? மற்றவர்கள் இது பற்றி என்ன கூறுகின்றனர்? என்பதை எடுத்துக் கூறுவேன். அவ்வாறே அந்த குத்பாவின் சில சொற்றொடர்களை அல்லது சில சிறிய மேற்கோள்களை எடுத்துரைப்பேன்.

இந்த இல்ஹாமின் (இறையறிவிப்பின்) உண்மைநிலையும், மகத்துவமும் அதைப் படிப்பதன் மூலமே தெரிய வருகிறது. ஆனால் நான் படித்துக் காட்டுவதற்காக தேர்ந்தெடுத்திருக்கின்ற இந்த சில சொற்றொடர்களிலிருந்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்தும் மகிமையும் தெரிய வருகிறது. குத்பா இல்ஹாமிய்யா தனி நூலாக வெளிவந்ததன் காரணமாக தஸ்கிராவில் இது இணைக்கப்படவில்லை போலும்! ஆனால் எப்படி இருந்தலும் இதில் இன்னும் பாதுகாப்பு அம்சத்தை கடைபிடிக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

எனவே இனி தஸ்கிராவை அடுத்த பதிப்பில் வெளியிடும்போது அல்லது வேறு எந்த மொழியில் வெளியிட்டாலும் சம்பந்தப்பட்ட துறை இது தொடர்பாக என்னிடம் கேட்டுக் கொள்ளட்டும். இதன் பின்னணி இதுவாகும்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் யவ்முல் அரஃபாத்திற்கு ஒரு நாள் முன்பு (அதாவது 1900 ஆம் ஆண்டு ஈதுல் அழ்ஹாவிற்கு ஒரு நாள் முன்பு) கடிதம் மூலமாக ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்களுக்கு, **'இன்று கலும் இரவின் ஒரு குறிப்பிட்ட பகுதியிலும் எனக்காகவும் எனது நண்பர்களுக்காகவும் துஆவில் ஈடுபட விரும்புகிறேன்; எனவே இங்கு இருக்கின்ற நண்பர்கள் தனது பெயரையும், முகவரியையும் எழுதி எனக்கு அனுப்புங்கள். அதுஆ செய்யும்போது எனக்கு நினைவிருக்கும்'** என தகவல் அனுப்பினார்கள். இந்த கட்டளையை நிறைவேற்றும் வகையில் சகோதரகளைப் பற்றிய பட்டியல் ஆயத்தம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. ஹுஸூர் (அலை) அவர்கள், மக்ரிப், இஷாவுக்குப் பிறகு கூறினார்கள்: நான் அல்லாஹ்விடம், இன்று பகலும் இரவின் சில பகுதிகளை துஆக்களில் கழிப்பேன் என வாக்குறுதி கொடுத்துள்ளேன். எனவே வாக்குறுதியை மீறியதாக இல்லாதிருக்கும் பொருட்டு நான் (துஆ செய்யச்) செல்கின்றேன் எனக் கூறியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் சென்று துஆவில் ஈடுபட்டு விட்டார்கள். மறு நாள் காலை (அதாவது ஹஜ்ஜுப் பெருநாளன்று) ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் உள்ளே சென்று சொற்பொழிவாற்றுவதற்காக சிறப்பாக விண்ணப்பித்தார்கள். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் இறைவன்தான் கட்டளையிட்டான் எனக்கூறினார்கள். பிறகு, **கூட்டத்தில் கொஞ்சம் அரபி சொற்றொடர்களைக் கூறுவீராக என இரவில் இல்ஹாம் இறங்கியது எனக் கூறினார்கள்.** மேலும் நான் வேறு ஏதோ கூட்டமாக இருக்கும் என நினைத்தேன். ஆனால் பெருநாளாகிய இந்தக் கூட்டமாகத்தான் இருக்கும் போலும் என்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபியில் குத்பா நிகழ்த்த ஆயத்தமானபோது ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களிடம் **நீங்கள் மிக நெருக்கமாக் அமர்ந்து இந்த குத்பாவை எழுதுங்கள்** எனக் கூறினார்கள். மவ்லவி சாஹிபுகள் ஆயத்தமானபோது ஹஸ்ரத் (அலை) அவர்கள், **'யா இபாதல்லாஹ் (அல்லாஹ்வின் அடியார்களே!)'** என்ற சொல்லுடன் அரபி குத்பாவை ஓதத் துவங்கினார்கள். குத்பாவின் இடையிலேயே, **'இப்போது இதை எழுதிக் கொள்ளுங்கள்; பிறகு இந்த சொற்கள் சென்று விடும்'** எனக் கூறினார்கள்.

அதாவது உடனுக்குடன் எழுதிக் கொள்ளுங்கள்; ஏதாவது சொல் புரியவில்லைஎன்றால் கேட்டுக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் குத்பா ஓதி முடித்ததும் பெரும்பாலான மக்களின் விண்ணப்பத்தினால் மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் அதற்கான மொழியாக்கத்தைக் கூறுவதற்காக எழுந்து நின்றார்கள். மவ்லானா சாஹிப் மொழியாக்கத்தைக் கூறுவதற்கு முன் ஹஸ்ரத் (அலை) அவர்கள், **'இந்த குத்பா நேற்று அரஃபாத் நாளன்று பெருநாள் இரவில் நான் செய்த துஆக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கான அடையாளமாக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. அதாவது நான் குத்பாவை அரபி மொழியில் சிந்திக்காமல் சீக்கிரம் கொடுத்து விட்டால் அனைத்து துஆக்களும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டன என கூறப்பட்டிருந்தன. இறைவனின் வாக்குறுதிக்கேற்ப அந்த அனைத்து துஆக்களும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டன - அல்ஹம்துலில்லாஹ்** எனக் கூறினார்கள். இதற்குப் பிறகு அதற்கான உருது மொழியாக்கம் துவங்கியது. மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் மொழியாக்கத்தைக் கூறத் துவங்கத்தான், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் ஆர்வம் மிகுதியால் நன்றி சஜ்தாவில் வீழ்ந்தார்கள். ஹுஸூர் (அலை) அவ்ர்களுடன் அனைவரும் நன்றி சஜ்தாவில் வீழ்ந்தனர். சஜ்தாவிலிருந்து தலையை தூக்கியதும் ஹஸ்ரத் (அலை) அவர்கள், **'இப்போது நான் முபாரக் (வாழ்த்துக்கள்) என்ற சொற்களை சிவப்பு எழுத்தில் எழுதியிருக்கக் கண்டேன்; ஆக இது ஒப்புக்கொள்ளப்பட்டதற்கான அடையாளமாகும்'** என்றார்கள்.

இந்த குத்பா இல்ஹாமிய்யாவைப் பற்றி அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இன்னும் பல விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. குத்பா ஒரு வலுவான அறிவுப்பூர்வமான அடையாளமாகும். இதன் சிறப்பான முக்கியத்துவத்தின் அடிப்படையில், ஹஸ்ரத் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பல தொண்டர்களையும் மனனம் செய்யச் சொன்னார்கள். இதன்படி, சூஃபி குலாம் முஹம்மது சாஹிப், ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப், முஃப்தி முஹம்மது சாஹிப் சாஹிப், மவ்லவி முஹம்மது அலி சாஹிப் ஆகியோர் உட்பட இன்னும் பலர் அதனை மனனம் செய்தனர். இன்னும் சொல்லப்போனால், கடைசியாகக் கூறப்பட்ட இரண்டு பேர் (அதாவது

முஃப்தி முஹம்மது சாஹிப், மவ்லவி முஹம்மது அலி சாஹிப்) மஸ்ஜிது முபாரக்கின் மேல் மாடியில் மக்ரிப் இஷாவுக்கு இடைப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அவையிலும் மனனமாகக் கூறி வந்தனர். மேலும் அரபு இலக்கியத்தில் மிக மேலான ஆர்வம் கொண்டிருந்த ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் இந்த குத்பாவை அடிக்கடி கூறிக்கொண்டிருக்கும் அளவுக்கு அதன் மீது அன்பு கொண்டிருந்தார்கள். மேலும் அதன் சில சொற்றொடர்களினால் எப்போதும் உணர்ச்சிவசப்பட்டார்கள். மிக உயர்ந்த ஞானம் கொண்ட ஒரு மார்க்க அறிஞருக்கு குத்பா இல்ஹாமிய்யா போன்ற அற்புதமான சொற்களினால் உணர்ச்சிவசப்படுவது என்பது ஓர் இயல்பான விஷயம்தானே எனக் கூறப்படலாம். ஆனால் இறைவனிடமிருந்து எத்தகைய ஆச்சரியமான விஷயம் வெளிப்பட்டதென்றால், இந்த சொற்பொழிவைக் கேட்ட சிறுவர்கள் கூட அதன் ஈர்ப்புத்தன்மையை விட்டு வெளியேறவில்லை.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்று என்னவெனில், இந்த சொற்பொழிவு நிகழ்த்தப்பட்ட அந்த நாட்களில் அந்த சொற்பொழிவின் கருத்தில் இன்னும் மூழ்காத சின்னச் சின்ன 12 வயதுக்கும் குறைவான சிறுவர்களும் அந்த சொற்றொடர்களை காதியானின் தெருக்களில் கூறிக் கொண்டிருந்தனர். அது ஓர் அசாதாரணமான விஷயமாக இருந்தது. இந்த குத்பா 1901-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஹுஸூர் (அலை) அவர்கள் மிக நல்ல ஏற்பாட்டுடன் அதனை, எழுதுபவரைக் கொண்டு எழுத வைத்தார்கள். மேலும் தாமே அதனை ஃபார்ஸியிலும், உருதுவிலும் மொழியாக்கம் செய்தார்கள். மேலும் அஃராபும் அவர்களே இட்டார்கள். (அதாவது ஸபர், ஸேர், பேஷ் ஆகியவற்றையும் அவர்களே இட்டார்கள்.) அசல் குத்பா, 'குத்பா இல்ஹாமிய்யா' என்ற நூலின் 38-ஆவது பக்கத்தில் முடிந்து விடுகிறது. அது நூலின் முதல் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த பகுதி கடைசி வரை பொதுவாக இயற்றப்பட்டதாகும்; அதனை ஹுஸூர் (அலை) அவர்கள் அதிகப்படியாக பின்னால் சேர்த்தார்கள். மேலும் முழு நூலும் குத்பா இல்ஹாமிய்யா எனப் பெயரிடப்பட்டது.

அதாவது முதல் பகுதி குத்பா இல்ஹாமிய்யாவாகும். அது இல்ஹாமியதாகும். இந்த நூல் வெளியானபோது மாபெரும் அரபி மொழி அறிஞர்கள் அதன் நிகரற்ற மொழிப்புலமையையும், மகத்தான உண்மையையும், இறைஞானங்களையும் படித்து வியப்பிற்குள்ளாயினர். **இது முஹம்மதிய்ய மஸீஹின் எத்தகைய ஞானம் நிறைந்த இறையடையாளம் என்றால், திருக்குர்ஆனுக்குப் பிறகு இதற்கு நிகரானதைக் காண முடியவில்லை!** என்பதே உண்மையாகும். இந்த குத்பா இல்ஹாமிய்யாவைப் பற்றிய இரண்டு கனவுகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய எழுதுகோலின் மூலமாக எழுதப்பட்டதாக தஸ்கிராவிலிருந்து நமக்கு இவ்வாறு கிடைக்கின்றது :

19, ஏப்ரல் 1900 என்ற தேதியைப் பார்த்து மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி அவர்களின் கீழ்வரும் கனவு எழுதினார்கள்:

மியான் அப்துல்லாஹ் சனோரி கூறுகிறார்கள்: சனோரைச் சேர்ந்த மர்ஹூம் முன்ஷி குலாம் காதிர் இங்கு (காதியான்) வந்திருந்தார். அவரிடம் (மியான் சனோரி) அவர்கள், இந்த மாநாட்டைப் பற்றி (இந்த குத்பா இல்ஹாமிய்யாவைப் பற்றி) மக்கள் என்ன கூறுகிறார்கள் என்ற செய்தியைக் கூறுங்கள் எனக் கேட்டார். அதற்கு அவர், மேலே மிகவும் ஆரவாரம் எழுந்துள்ளது எனக் கூறினார். என்ன ஆரவாரம் என்பதைப் பற்றி - அதில் ஒருவர் கண்ட கனவைப் பற்றி அவர் கூறுகிறார்:

''இந்தக் கனவு ஸய்யிது அமீர் அலி ஷாஹ் சாஹிப் அவர்களின் கனவைப் போன்றே முற்றிலும் இருக்கிறது. அவர் கண்டதாவது, பெருநாளன்று அரபியில் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தபோது ஜனாப் ரஸூலுல்லாஹ் (ஸல்), ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் கிழ்ரு ஆகியோர் ஜல்ஸாவில் அமர்ந்து குத்பாவைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கனவு குத்பா கொடுத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் அங்கு உட்கார்ந்திருந்தபோது ஆன்மீகக் காட்சியாக அவர்களுக்குத் தெரிந்து விட்டது.''

**சில சஹாபிகளின் தாக்கங்களும் இருக்கின்றன:**

ஹஸ்ரத் ஹாஃபிஸ் அப்துல் அலீ சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

''குத்பா இல்ஹாமிய்யா நடந்து கொண்டிருந்தபோது நான் இருந்தேன். ஹுஸூர் (அலை) அவர்களின் குரல் அப்போது மாறி இருந்தது. சியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஸய்யிது

முல்ஹம் (இவருக்கு இல்ஹாம் இறங்கிக் கொண்டிருந்தது; அவர் அஹ்மதியாக இருந்தார்). அவர் எனக்கு அருகில் இருந்தார். மலக்குகளும் (குத்பாவைக்) கேட்பதற்காக அமர்ந்திருகின்றனர் எனக் கூறினார்.''

ஹஸ்ரத் மியான் அமீருத்தீன் சாஹிப் கூறுகிறார்கள்: ''ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குத்பா இல்ஹாமிய்யாவை கூறி விட்டு வெளியேறியபோது வழியில், **'அடுத்த சொற்றொடர் என்ன இருக்கும் என எனக்குத் தெரியாமல் இருந்தது. எழுதப்பட்டது முன்னால் வந்து கொண்டிருந்தது. நான் அதைப் படித்துக் கொண்டிருந்தேன்'** எனக் கூறினார்கள். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் நின்று மெதுவாக படித்துக் கொண்டிருந்தார்கள்.''

ஹஸ்ரத் மவ்லவி அப்துல்லாஹ் பட்டாலவி அவர்கள் கூறுகிறார்கள்:

''ஸய்யிது அப்துல் ஹை என்பவர் அரபு நாட்டிலிருந்து வந்து காதியானில் பல நாட்களாக ஆய்வு செய்வதற்காக தங்கியிருந்தார். பின்னர் அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார். அவர் என்னிடம், தான் பைஅத் செய்த நிலையைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள நூல்களைப் படித்து, **இப்படிப்பட்ட விஷயங்காளை இறையுதவியின்றி எவரும் எழுத முடியாது என உள்ளத்தால் ஒப்புக்கொண்டு விட்டேன்.** (இது அன்னாருடைய சொந்த வார்த்தைகள் அல்ல; இறைவனுடைய வார்த்தைகளாகும் என) மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களும் மற்ற ஆலிம்களும் எனக்கு உறுதியளித்து வந்தனர் என்றாலும் எனது சந்தேகத்தை அவர்களுடைய கூற்று நீக்க முடியவில்லை. உண்மையிலேயே இது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடை கூற்றுதானா? வேறு எவருடைய உதவியும் இதில் இல்லையா? என்பதற்கான சான்றைப் பெறுவதற்காக நான் பல வழிகளில் முயற்சி செய்ய ஆரம்பித்து விட்டேன். எனவே நான் சில கடிதங்களை ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு அரபியிலேயே எழுதி அதற்கான பதிலை அரபியிலேயே பெற்று வந்தேன். பிறகு அந்த சொற்றொடர்களை கூர்ந்து கவனித்து வந்தேன். மேலும் அதனை ஹுஸூர் (அலை) அவர்களின் நூல்களுடன் ஒப்பிட்டு, இவை இரண்டும் ஒரே சொற்றொடர்கள்தானா எனப் பார்த்து வந்தேன். ஆயினும் அதில் சில மாற்றங்கள் தெரியத்தான் செய்தன. அதற்கு எனக்கு தரப்பட்ட பதில், 'ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கடிதங்களுக்கு எழுதும் பொதுவான சொற்களில் அற்புதமான தன்மையோ அல்லது சிறப்பான இறையுதவியோ இருக்க முடியாது. ஆனால் **ஹஸ்ரத் (அலை) அவர்கள் அரபி நூல்களை ஒட்டுமொத்தமாக இறைவனின் நாட்டத்தின் அடிப்படையிலும், கட்டளையின் அடிப்படையிலும் அவனுடைய சிறப்பானஆதரவினாலும் எழுதியிருக்கிறார்கள். எனவே அதன் தன்மை வேறு பட்டதாகும்; வேறுபட்டதாகவே இருக்கவும் வேண்டும்.** இல்லையென்றால் பொதுவான திறமைக்கும், சிறப்பான இறையுதவிக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லாமற்போய் விடும்' என்பதாகும்.

எப்படி இருந்தாலும் நானும் இவ்விதமான இறை ஆதரவிற்கான நேரத்தை சொந்தக் கண்களால் கண்டு கொள்ள வேண்டும் என்ற ஆய்வுக்காக காதியானிலேயே தங்கியிருந்தேன். அப்போது குத்பா இல்ஹாமிய்யா இறங்கும் நேரம் வந்தது. மேலும் நான் அந்த இல்ஹாமிய கூற்று, அற்புதமான கூற்று இறங்குவதை என் கண்களாலேயே கண்டேன். பிறருடைய எந்தவோர் உதவியுமின்றி அந்த மனிதர் எவ்வாறு பட்டப் பகலில் எல்லா மக்களுக்கும் முன்னால் இப்படிப்பட்ட சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள கூற்றைக் கூறிக் கொண்டிருக்கிறார் என காதுகளாலேயே கேட்டேன். எனவே நான் அந்த குத்பாவைக் கேட்டதற்குப் பிறகு மனந்திறந்து பைஅத் செய்து விட்டேன்.''

இப்போது நான் குத்பா இல்ஹாமிய்யாவின் சில மேற்கோள்களைப் படித்துக் காட்டுகிறேன். நான் கூறியது போன்று, அவற்றிலிருந்து அதன் மகத்துவம் பற்றி கொஞ்சம் கணித்துக் கொள்ளலாம். உண்மையான கணிப்பை முழு நூலையும் படிக்கும்போதுதான் உணர முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபியில் கூறுகிறார்கள்:**

اَيُّهَا النَّاسُ اِنِّيْ اَنَا الْمَسِيْحُ الْمُحَمَّدِيُّ۔ وَاِنِّيْ اَنَا اَحْمَدُ الْمَهْدِيُّ وَاِنَّ رَبِّيْ مَعِيْ اِلٰى يَوْمِ لَحْدِيْ مِنْ يَوْمِ
مَهْدِيْ۔ وَاِنِّيْ اُعْطِيْتُ ضِرَامًا اَكَّالًا ۔ وَمَاءً زُلَالًا وَاَنَا كَوْكَبٌ يَّمَانِيْ۔ وَوَابِلٌ رُوْحَانِيْ۔ اِيْذَائِيْ سِنَانٌ
مُذَرَّبٌ۔ وَدُعَائِيْ دَوَاءٌ مُجَرَّبٌ۔ اَرٰى قَوْمًا جَلَالًا وَقَوْمًا اٰخَرِيْنَ جَمَالًا وَبِيَدِيْ حَرْبَةٌ اُبِيْدُ بِهَا
عَادَاتِ الظُّلْمِ وَالذُّنُوْبِ۔ وَفِي الْاُخْرٰى شَرْبَةٌ اُعِيْدُ بِهَا حَيَاتَ الْقُلُوْبِ۔

**''அய்யுஹன்னாஸு இன்னீ அனல் மஸீஹுல் முஹம்மதிய்யு. வ இன்னீ அனா அஹ்மதுல் மஹ்திய்யு. வ இன்ன ரப்பீ மயீ இலா யவ்மி லஹ்தீ மின்ய் யவ்மிம் மஹ்தீ. வஇன்னீ உஃதீத்து ழராமன் அக்காலன். வ மாஅன் ஸுலாலன். வ அனா கவ்கபுன்ய் யமானீ. வ வாபிலுன்ர் ரூஹானீ. ஈஸாயீ ஸனானுன் முஸ்ர்ரபுன். வ துஆயீ தவாவுன் முஜர்ரபுன். அரா கவ்மன் ஜலாலன். வ கவ்மன் ஆகரீன ஜமாலன். வ பியதீ ஹர்பத்துன் உபீது பிஹா ஆதாதிழ் ழுல்மி வஸ்ஸுனூப். வஃபில் உக்ரா ஷர்பத்துன் உயீது பிஹா ஹயாத்தல் குலூப்.''**

அதாவது,''மக்களே! நான் முஹம்மதிய்ய சமுதாயத்தில் வந்த மஸீஹ் ஆவேன். மேலும் நான் அஹ்மதின் மஹ்தியாவேன். மேலும் நிச்சயமாக என் இறைவன் எனது குழந்தைப் பருவத்திலிருந்து நான் கபரில் செல்லும் வரை என்னுடன் இருக்கின்றான். (உலக ஆசையை) விழுங்கி விடக்கூடிய நெருப்பும், இனிப்பான தண்ணீரும் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் நான் ஏமனின் நட்சத்திரமாவேன். மேலும் நான் ஆன்மீக மழையாவேன். **எனக்கு துக்கம் கொடுப்பது கூர்மையான ஈட்டியாகும்.மேலும் எனது துஆ அநுபவப்பட்ட மருந்தாகும்.** நான் ஒரு சமுதாயத்திற்கு ஜலாலை (கம்பீரமான அம்சத்தை)க் காட்டுகிறேன்; இன்னொரு சமுதாயத்திற்கு ஜமாலை (அழகிய அம்சத்தை) க் காட்டுகிறேன். மேலும் எனது கையில் ஆயுதம் இருக்கிறது; அதன் மூலம் நான் அநீதி மற்றும் பாவத்தின் பழக்கங்களை அழிக்கின்றேன். இன்னொரு கையில் பானம் இருக்கிறது; அதன் மூலம் நான் உள்ளங்களை மீண்டும் உயிரூட்டுகிறேன்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபியில் கூறுகிறார்கள்:**

اَيُّهَا النَّاسُ قُوْمُوْا لِلّٰهِ زَرَافَاتٍ وَفَرَادٰى فَرَادٰى۔ ثُمَّ اتَّقُوا اللّٰهَ وَفَكِّرُوْا كَالَّذِىْ مَا بَخِلَ وَمَا عَادٰى اَلَيْسَ هٰذَا الْوَقْتُ رَحِمَ اللّٰهُ عَلَى الْعِبَادِ وَوَقْتُ دَفْعِ الشَّرِّ وَتَدَارُكَ عَطْشِ الْاَكْبَارِ۔ اَلَيْسَ سَيْلُ الشَّرِّ قَدْ بَلَغَ اِنْتِهَاهُ وَذَيْلُ الْجَهْلِ طُوْلَ اَرْجَاهُ۔ وَفَسَدَ الْمُلْكُ كُلُّهٗ وَشَكَرَ اِبْلِيْسُ جُهَلَاهُ۔ فَاشْكُرُ وا اللّٰهَ الَّذِىْ تَذَكَّرَكُمْ وَتَذَكَّرَ دِيْنَكُمْ وَمَا اَضَاعَهٗ۔ وَعَصَمَ حَرْثَكُمْ وَزَرْعَكُمْ وَلُعَاعَهٗ۔ وَاَنْزَلَ الْمَطَرَ وَاَكْمَلَ اَبْضَاعَهٗ۔ وَبَعَثَ مَسِيْحَهٗ لِدَفْعِ الضِّيْرِ۔ وَمَهْدِيَّهٗ لِاِفَاضَاتِ الْخَيْرِ۔ وَاَدْخَلَكُمْ فِىْ زَمَانِ اِمَامِكُمْ بَعْدَ زَمَانِ الْغَيْرِ۔

**''அய்யுஹன்னாஸு கூமூ லில்லாஹி ஸுராஃபாத்தின் வ ஃபுராதா ஃபுராதா. ஸும்மத்தகுல்லாஹ வ ஃபக்கிரூ கல்லஸீ மா பகில வ மாஅஃதா. அலய்ஸ ஹாஸல் வக்து வக்த ரஹிமில்லாஹி அலல் இபாத். வ வக்து தஃப்யி ஷ்ஷர்ரி. வ ததாருகு அத்ஷில் அக்பாத். அலய்ஸ ஸய்லுஷ் ஷர்ரி கத் பலக இன்திஹாஹு. வ ஸைலுல் ஜஹ்லி தூல அர்ஜாஹு. வ ஃபஸதல் முல்கு குல்லுஹு வ ஷகர இப்லீஸு ஜுஹ்லாஹு. ஃபஷ்குருல்லாஹ ல்லஸீ தஸக்கரக்கும். வ தஸக்கர தீனக்கும் வமா அஸாஅஹு. வ அஸம ஹர்ஸக்கும் வ ஸரஅக்கும் வ லுஆஅஹு. வ அன்ஸலல் மதர வ அக்மல அப்லாஅஹு. வ பஅஸ மஸீஹஹு லித்தஃப்யிழ் ழய்ர். வ மஹ்திய்யஹு லிஇஃபாழாத்தில் கைரி. வஅத்கலக்கும் ஃபீ ஸமானி இமாமிக்கும் பஅத ஸமானில் கைர்.''**

''மக்களே! இறைவனுக்காக நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ இறையச்சத்தை மேற்கொண்டு, கருமித்தனம் காட்டாத, பகைமை காட்டாத ஒருவரைப் போன்று சிந்தியுங்கள். இந்த காலம், இறைவன் தன் அடியார்களின் மீது கருணைகாட்டாத காலமில்லையா? தீமையை ஒழிப்பதற்கான காலமில்லையா? தாகத்தால் துடிக்கும் உள்ளங்களை மழையைக் கொண்டு தாகத்தை தீர்க்க வேண்டிய காலமில்லையா? தீமை எனும் வெள்ளம் தனது இறுதி எல்லையை எட்டவில்லையா? அறியாமை எனும் ஆடை தனது ஓரங்கள் வரை விரிக்கவிலையா? மேலும் நாடு கெட்டுப் போய் விட்டது. ஷெய்த்தான் அறிவிலிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளான். **எனவே (இப்படிப்பட்ட காலத்தில்) உங்களை நினைத்துப் பார்த்த - உங்கள் மார்க்கத்தை நினைத்துப் பார்த்த அந்த இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.** அது வீணாகி விடாமல் இருப்பதற்காக அதனைப் பாதுகாத்தான். மேலும் நீங்கள் விதைத்ததையும், உங்களின் விளைச்சலையும் ஆபத்துகளிலிருந்து காப்பாற்றினான். மேலும் மழையைப் பொழிய வைத்தான். மேலும் அதன் முதலீட்டை முழுமைப்படுத்தினான். மேலும் தனது மஸீஹை துன்பத்தைப் போக்குவதற்காகவும், தனது மஹ்தியை நன்மைக்காவும், பயனுக்காகவும்

அனுப்பினான். மேலும் அந்நியர்களின் காலத்திற்குப் பிறகு அவன் உங்களை இமாமின் காலத்தில் நுழையச் செய்தான்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபியில் கூறுகிறார்கள்:**

وانّی علی مَقَامِ الْخَتْمِ مِنَ الْوَلَایَۃِ کَمَا کَانَ سَیِّدِ الْمُصْطَفٰی عَلٰی مَقَامِ الْخَتْمِ مِنَ النُّبُوَّۃِ۔ وَاَنَا
خَاتَمُ الْاَوْلِیَاءِ۔ لَا وَلِیَّ بَعْدِ۔ اِلَّا الَّذِیْ ھُوَ مِنِّیْ وَعَلٰی عَھْدِیْ۔ وَاِنِّیْ اُرْسِلْتُ مِنْ رَّبِّیْ بِکُلِّ قُوَّۃٍ وَبَرَکَۃٍ
وَعِزَّۃٍ۔ وَاِنَّ قَدَمِیْ ھٰذِہٖ عَلٰی مِنَارَۃٍ خُتِمَ عَلَیْھَا کُلُّ رَفْعَۃٍ۔ فَاتَّقُوا اللّٰہَ اَیُّھَا الْفِتْیَانِ۔ وَاعْرِفُوْنِیْ وَ
اَطِیْعُوْنِیْ وَلَا تَمُوْتُوْا بِالْعِصْیَانِ۔ وَقَدْ قَرُبَ الزَّمَانُ۔ وَحَانَ اَنْ تُسْئَلَ کُلُّ نَفْسٍ وَتُدَانَ۔

**''வ இன்னீ அலா மகாமில் கத்மி மினல் வலாய கமா கான ஸய்யிதில் முஸ்தஃபா அலா மகாமில் கத்மி மினன்னுபுவ்வத்தி. இன்னஹூ காத்தமுல் அன்பியாயி. வ அனா காத்தமுல் அவ்லியாயி. லா வலிய்ய பஅதீ இல்லல்லஸீ ஹுவ மின்னீ வ அலா அஹ்தீ. வ இன்னீ உர்ஸில்த்து மின் ரப்பீ பிகுல்லி குவ்வத்தின் வ இஸ்ஸத்தின். வ இன்ன கதமீ ஹாஸா அலா மினாரத்தி குதிம அலைஹா குல்லு ரிஃப்அத்தின். ஃபத்தகுல்லாஹ அய்யுஹல் ஃபித்யான். வஅஃரிஃபூனீ வ அதீஊனீ வ லா தமூதூ பில் இஸ்யான். வகத் கருபஸ் ஸமான். வ ஹான அன் துஸ்அல குல்லு நஃப்ஸின் வ துதான.'',**

'' ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நுபுவ்வத்தின் தொடரை முடிவுக்குக் கொண்டுவருபவராக இருந்ததைப் போன்று, நான் விலாயத்தின் (வலிமார்களின்) தொடரை முடிவுக்குக் கொண்டு வருபவனாக இருக்கிறேன். மேலும் நிச்சயமாக அவர்கள் (ஸல்) காத்தமுல் அன்பியா ஆவார்கள்; நான் காத்தமுல் அவ்லியா ஆவேன். என்னிடமிருந்து தோன்றுபவரைத் தவிர, எனது வாக்குறுதியில் நிலைபெற்றிருப்பவரைத் தவிர எனக்குப் பிறகு எந்த வலியுல்லாஹ்வும் இல்லை. மேலும் நான் என் இறைவனிடமிருந்து எல்லாவகையான ஆற்றல்,அருள் மற்றும் கண்ணியத்துடன் அனுப்பப்பட்டுள்ளேன். எனது இந்தக் காலடி எத்தகைய மினாராவில் இருக்கிறதென்றால், அதில் எல்லா உயர்வும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே இறைவனுக்கு அஞ்சுங்கள். **இளைஞர்களே! என்னை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். கட்டுப்படாமல் இருக்காதீர்கள்; கட்டுப்படாமையில் மரணிக்காதீர்கள்.** ஒவ்வோர் உயிரும் தனது செயல்களைப் பற்றி கேள்வி கேட்கப்படுகின்ற, கூலி வழங்கப்படுகின்ற காலம் நெருங்கி விட்டது.''

எனவே இதுதான் அந்த மகத்தான அடையாளமாகும். இதுதான் அல்லாஹ்வின் கட்டளையினால் இறையறிவிப்பினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மகத்தான சொற்களில் கொடுத்த அழைப்பாகும். நான் கூறியதைப் போன்று இந்த அடையாளம் 11, ஏப்ரல் 1900 - ஆம் ஆண்டு வெளிப்பட்டது. **அவர்களிடம் இன்று வரை இந்த அடையாளம் தனது ஒளியைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இன்று வரை திறமையிலும் திறமை வாய்ந்த மொழியியல் அறிஞரும், மிகப் பெரிய மார்க்க அறிஞரும், இலக்கிய அறிஞரும் - அவர் அரபு நாட்டில் வாழ்பவராக இருந்தாலும் இதற்கு போட்டியிட முடியவில்லை! மேலும் எவ்வாறு போட்டி நடக்க முடியும்? இது அன்னார் (அலை) அவர்களின் நாவிலிருந்து வெளி வந்த இறைவனுடைய வார்த்தைகளாகும்!!** அல்லாஹ் உலகத்திற்கு- குறிப்பாக அரபு முஸ்லிம்களுக்கு இறைவனின் தூதருடைய தூதைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவையும், தைரியத்தையும் வழங்குவானாக. இன்று மீண்டும் முஹம்மதிய்ய உம்மத்தை ஒரே உம்மத்தாக மாற்றுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசருக்கு உதவியாளர்களாக (அரபிகளாகிய) அவர்கள் மாறுவார்களாக. அல்லாஹ் நமக்கும் நமது பொறுப்புகளை நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***